# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 1964/70 - 2016 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2016.04.29**

*1964/70 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் , 2016.01.12 ஆந் திகதிய 1949/29 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் மேற்குறித்த கட்டளையின் கீழ் வெளியிடப்பட்ட அட்டவணையை இதனகத்துப் பின்னர் உள்ளவாறான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கின்றேன்.*

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 1,
2016, ஏப்பிறல் 29.

**அட்டவணை**

*2016.01.12 ஆந் திகதிய 1949/29 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணை I ( இ) விடயத்திற்கு உடன் அடுத்து கீழ்வரும் விடயங்களை உட்படுத்துவதன் மூலம் :-*

| இல. I | | விடயம் II | உற்பத்தி தீர்வை III |
|---|---|---|---|
| 1 | (ஈ) | இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் :<br>(i) சலுகை பத்திர நியதிகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால்,<br>(ii) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 2012.05.28 ஆந் திகதிய 210 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அதற்குப் பிற்பட்ட திருத்தங்களுக்கு அமைய வெளிநாட்டு தூதுவராலயங்களில் கடமையாற்றும் இலங்கை இராஜதந்திரியொருவரினால், மற்றும் | 2015.02.26 ஆந் திகதிய 1903/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் அவற்றிற்கு நேரொத்த பதிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதம் |



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இல. I | | விடயம் II | உற்பத்தி தீர்வை III |
|---|---|---|---|
| | | (iii) உள்ளூராட்சி மாகாண சபைகளின் 2013.01.02 ஆந் திகதிய உள்ளூராட்சி மாகாண மாகாண சபைகள் சுற்றறிக்கை இல. 01/ 2013, மற்றும் மாகாண சபை ஒன்றின் ஆளுநர் சலுகை நியதிகளின் பிரகாரம், உள்ளூராட்சி மாகாண சபைகளின் கீழ் மாகாண சபை ஒன்றின் அங்கத்தவர் ஒருவரினால்,<br><br>2015.11.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சலுகை வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டும், 2015.12.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திருத்தப்பட்டு, இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், | |

5 - 509